Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு

மலர் 31 | விளம்பி ஆடி 1958 ஜூலை | இதழ் 7

ஆரூரர் தோழமை*

இராவ்சாகிப் - நல். முருகேச முதலியார், பி.ஏ.

'ஆதரம்பயில் ஆரூரர் தோழமை' என்பது ஸ்ரீ அருணகிரியார் அழகிய திருவாக்கு. நம்பியாரூரரின் தோழமை இருவகைத்தாகும். அவை தம்பிரான் தோழமையும் சேரமான் தோழமையுமாகும். ஆதரம் என்பது அன்பு எனப் பொருள்படும். சிறந்த பொருள் ஆதாரம் எனக் கொள்ளப்படும். ஆதாரமிலான் அருளைப் பெறுவது எவ்வாறு? வாழ் முதலாகிய பொருளின் அருளைப்பெறும் மார்க்கங்களில் ஆதரம்பயில் தோழமை ஒன்றாகும்.

> " சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்ரமார்க்கம்
> தாதமார்க்கம் என்று சங்கரனை அடையும்
> நன்மார்க்கம் நான்கு ; அவைதாம் ஞானயோகம்
> நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வர் "

எனவரும் சிவஞான சித்தியார் இதனை விளக்கும்.

சைவ சமய ஆசிரியர்கள் நால்வர்களுள் சன்மார்க்கத்தை மணிவாசகரும், சகமார்க்கத்தைச் சுந்தரரும், சற்புத்ர மார்க்கத்தைச் சம்பந்தரும், தாத மார்க்கத்தை அப்ப

---

* தருமையாதீனத்தில் நிகழ்ந்த திருநெறிய தெய்வத்தமிழ் மாநாட்டில் 'சுந்தரர் நாள்' (1-6-'58) அன்று நிகழ்த்திய தலைமையுரையைத் தழுவியது.

ரும் உலகுக்கு விளக்கிக் காட்டி அருளியுள்ளார்கள். முன்னிரண்டும் மார்ச்சால நியாயத்திற்கும் பின் இரண்டும் மர்க்கட நியாயத்திற்கும் இலக்காகும். சிவபெருமானே சுந்தரர்க்குத் தம்மைத் தோழராகத் தந்து தண்ணளி புரிந்தனர் என்பதைப் பின்வரும் தெய்வச் சேக்கிழார் வாக்கு விளக்கும்.

"வாழிய மாமறைப் புற்றிடங்கொள் மன்னவன்
ஆர்ருளால் ஓர் வாக்குத்
தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம்
நாம்முன்பு தொண்டு கொண்ட
வேள்வியில் அன்றுநீ கொண்டகோலம் என்றும்
புனைந்து நின்வேட்கை தீர
வாழி மண்மேல் விளையாடுவாய் என்றுரூரர்
கேட்க எழுந்த தன்றே"

கற்பனைக் களஞ்சியம் எனக் கற்றுணர்ந்த புலவர்கள் பெரிதும் பாராட்டி மகிழும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்,

"அறிந்து செல்வம் உடையானும்
அளகைப் பதியாற் றேழமைகொண்
டுறழ்ந்த கல்வி உடையானும்
ஒருவன் வேண்டும் என இருந்து
துறந்த முனிவர் தொழும்பாவை
துணைவா! உனைத்தோ ழமைகொண்டான்!
சிறந்த அறிவு வடிவமாத்
திகழும் நுதற்கட் பெருமானே"

எனச் சுவைபட அருளிச் செய்திருத்தலும் அறிந்து மகிழற்பாலது.

தோழமை என்பது ஒத்தார்மாட்டு நிகழும் நட்பும் அன்புமாகும். அவ்வன்புக்கு அறிகுறி ஒருவர் குறையை மற்றோர் நிறைவு செய்வது. அதன் தத்துவம் உடனாதலும் உடன்பாடாதலும் எனக் கூறலாம். இறைவன் தம்மை ஆளுடைய நம்பிகளுக்குத் தோழமையாகத் தந்தனம் என்பது சைவ சித்தாந்தத்தில் உடனாதல் என்னும் இறைவனின் இயல்பாகும். இறைவனை உடனாய் வைத்தல் தோழமை

யாகும். அஃது இறைவன் அருள்பாலித்தமாட்டே நிகழும். எனவே சிவபெருமான் ஆரூரருக்குத் தம் தோழமையைத் தந்தோம் எனக் கூறினர். "தா என் கிளவி ஒப்போன் கூற்றே" என்ருர் தொல்காப்பியனர்.

யோகம் எனும் சொல்லுக்குச் சேர்தல் எனப் பொருள். சேர்ந்திருப்பது தோழமையாகும். ஈண்டு யோகம் என்பது அஷ்டாங்கயோகத்தைக் குறிப்பதன்று. அது ஒரு சாதனம் என்றுதான் கூறலாம். சுந்தரர் யோகம் பயின்ருர் என்று அவர் சரிதையிலோ அவர் பதிகங்களிலோ காணவில்லை. அவர் பயின்றது ஆகரம்பயில் தோழமைதான். இறைவன் மணிவாசகருக்குத் தன்னையே தந்தார். சுந்தரருக்குத் தோழமையாகத் தம்மைத் தந்தார் எனின் சுந்தரர் மண் மேல் விளையாட வேண்டிய வினைப்பயன் முற்ருகவில்லை. தடுத்தாளவந்த நேரத்தில் வன்மை பேசினர் சுந்தரர். சுந்தரருக்கு அந்தத் தில்லையில் பாலித்த அருள் திரோபவம். மணிவாசகருக்கு தந்தது அனுக்கிரகம். யோகிகளுக்குத் தன் முனைப்பு மாயவில்லை. நீ வேறு நான் வேறு எனுது நேராக வாழ்வேன் என்ற சங்கல்பத்திலும்கூட 'நான்' என்பது அறவில்லை. அது அடங்கியிருந்து உணரும் அடக்கம்தான், இந்த யோக சம்பந்தமே உடனுதலின் பேறு. (சேரமான் தோழமையிலும் சுந்தரர் கைலை ஏகும் பேற்றிலும் பங் களித்த மாண்பு உணர்க.)

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவன்பால் தோழமை நெறியில் அன்பு செலுத்தியவர் என்பதனை,

"ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யும் துரிசுகளுக் குடனுகி
மாழைஒண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே"

என்பன போன்று வரும் பல பதிகங்கள் விளக்கி நிற்கின் றன. இறைவன் தமக்குத் தோழனுக விளங்கிய தன்மையைச் சுந்தரர் குறிப்பிட்டுருக்கும் இப்பாடலின்கண் மிகவும் ஈடுபட்டு வியந்து,

"ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் என்றுமுன்நீ சொன்னபெருஞ் சொற்பொருளை

ஆழநினைந் திடில்அடியேன் அருங்காணம் கரைந்துகரைந்
தாழியில்ஒன் றுவதுகாண் உயர்கருணைப் பெருந்தகையே"

என அருட்டிரு. இராமலிங்க அடிகளார் மிகுந்த ஆராமை யுடன் பாடியிருத்தல் அறிந்துகொளற்பாலது.

"மங்கை ஒருபால் மகிழ்ந்ததுவும் அன்றி மணிநீள் முடியின்கண்
கங்கை தன்னைக் கரந்தருளும் காதல் உடையீர்! அடியேனுக்
கிங்கு நமக்குத் திருமாலை தொடுத்தென் உள்ளத் தொடைஅவிழ்த்த
திங்கள் வதனச் சங்கிலியைத் தந்தென் வருத்தம் தீரும்என"

இறைவன்பாற் சுந்தரர் வேண்டிக் கொண்டதும், நண்பர் ஒன்று சொன்னால் அதனை மறுக்க மாட்டாத கண்ணோட்டம்பற்றி "மகிழ்க்கீழ் இரு" என்று சுந்தரர் சொன்ன போது உடன்பட்டு நின்று, பின்னர்ச் சங்கிலியாரிடம் இறைவன் உண்மையை உணர்த்தி விட்டதும், அஃதறிந்த சுந்தரர்,

"பொன்னவிலும் கொன்றையினாய்! "போய்மகிழ்க்கீழ் இரு!"என்று
சொன்னஎனைக் காணாமே, "சூளுறவு மகிழ்க்கீழே"
என்னவல்ல பெருமானே! இங்கிருந்தா யோ?என்ன,
ஒன்னலரைக் கண்டாற்போல் "உளோம்போகீர்" என்றானே!"

எனப் பாடியதும் பிறவும், சுந்தரரின் தோழமை நெறியின் இயல்பு இனையதென விளக்கா நிற்கும்.

"பாதியோர் பெண்ணை வைத்தாய் படர்சடைக் கங்கை வைத்தாய்
மாதர் நல்லார் வருத்தம் அதுநீயும் அறிதி யன்றே ?"

"ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே !"

"இவரலா தில்லையோ பிரானார் ?"

"எத்துக்கிங் கிருந்தீர் ? எம்பிரானிரே !"

"மகத்திற் புக்கதோர் சனிஎனக் காணாய் !"

என்பன போன்று ஆங்காங்கு வரும் சுந்தரர் பாடலின் பலப்பல பகுதிகள்கொண்டு, சுந்தரர் இறைவன்பாற் கொண்டிருந்த தோழமைக் கெழுதகைமை யுரிமையினையும், அக்கெழுதகை யுரிமைக்கு உப்பாக விளங்கிய இறைவனது

அருளியல் எளிமைப் பண்பினையும் நாம் செவ்விதின் உணர்ந்து கொள்ளலாம்.

சுந்தரர்க்கு இறைவன் தம்மைத் தோழமையாக அளித்தது மட்டுமே யன்றிச் சேரமான் பெருமாள், ஏயர்கோன் கலிக்காமர், சோமாசி மாறர், விறன்மிண்டர் ஆகிய பிறரையும் தோழர்களாகச் செய்தருளி உவந்த தன்மை உன்னுந்தொறும் நமக்கு உவகை விளைவிப்பதாகும்.

" முன்பு பணிந்த பெருமாளைத் தாமும் பணிந்து முகந்தெடுத்தே
அன்பு பெருகத் தழுவவிரைந் தவரும் ஆர்வத் தொடுதழுவ
இன்ப வெள்ளத் திடைநீந்தி ஏற மாட்டா தலைவார்போல்
என்பும் உருக உயிர்ஒன்ற உடம்பும் ஒன்றும் என இசைந்தார் "

எனச் சேக்கிழார் பெருமான், சேரமான்பெருமாளும் சுந்தரரும் தோழமை பாராட்டி மகிழ்ந்த செய்தியை அழகொழுகப் பாடியிருத்தல் கற்றோர்க்குக் கழிபேரின்பம் பயப்பதாகும். இவ்வாற்றா னெல்லாம் ஆரூரரின் தோழமை நெறியின் அளப்பருஞ் சீர்த்தியினை யாவரும் இனிதுணரலாம்.

" முதற்பொருள் அளவைகளான் அறியப்படும் இயல் பிற்றெனின், அங்ஙனம் அறியப்படும் உலகம்போல அழி பொருளாகிய அசத்தாம் ; எவ்வாற்றானும் அறியப்படாத இயல்பிற்றெனின், அங்ஙனம் அறியப்படாத முயற்கோடு யாமை மயிர்க்கம்பலம் முதலியன போலச் சூனியமாம். ஆகலான் பாசஞான பசுஞானங்களான் அறியப்படாமையும், சிவஞானம், ஒன்றானே அறியப்படுதலும் ஆகிய இரண்டு வகையானும் முதற்பொருள் சிவமாகிய சத்தாய் உள்ளது " என்னும் கருத்தமைய,

" உணருரு அசத்தெனின் உணரா தின்மையின்
இருதிறன் அல்லது சிவசத் தாம்என
இரண்டு வகையின் இசைக்குமன் னுலகே "

எனச் சிவஞான போதமும்,

" அறிவுறும் பொருளோ? ஈசன் அறிவுறா தவனோ? என்னின்,
அறிபொருள் அசித்துஅ சத்தாம்; அறியாத தின்றாம்; எங்கும்
செறிசிவம் இரண்டும் இன்றிச் சித்தொடு சத்தாய் நிற்கும்!
நெறிதரும் சத்தின் முன்னர் அசத்தெலாம் நின்றி டாவே !"

எனச் சிவஞான சித்தியாரும் கூறுதற் கேற்பச் சிவஞானம் கைவரப்பெற்ற தக்கார்க்கு மிகவும் எளிவந்து தண்ணளி கள் பல புரிந்தருளும் இறைவனின் எளிமைத் தன்மையினை, ஆரூரரின் தோழமை நெறி ஐயமறச் செவ்விதின் உணர்த்து கின்றது.

"கடல்அலைத்தே ஆடுதற்குக் கைவந்துநின்றும்
கடல்அளக்க வாராதாற் போலப்—படியில்
அருத்திசெய்த அன்பரைவந் தாண்டதுவும் எல்லாம்
கருத்துக்குச் சேயனுய்க் காண் !"

எனத் திருக்களிற்றுப்படியார் கூறுவதனுல், தூதுபோதல் முதலிய எளிய செயல்களை அன்பின் பொருட்டுச் செய்தன னுயினும், அவைபற்றி இறைவனின் முதன்மைக்கு இழுக் கொன்றில்லை என்பதுணரற்பாற்று.

—முருகவேள்

மெய்ஞ்ஞானம்

சித்தாந்தப் பிரசங்காமிர்தம் - **பூ. சமரபுரி முதலியார்**

மெய்ஞ்ஞானம் என்பது மெய்ப்பொருளாகிய சிவத்தை உண்மையாக அநுபவத்தில் உணர்தற்கு உரிய ஞானம். இதன் பயன் பேரானந்த அநுபவமாகும். இந்த மெய்ஞ் ஞானம் உயிர்களுக்கு நிகழ்கின்ற முறை :—

உயிர்கள் இயற்கையாகவே - அனுதியே ஆணவமலத் தால் மூடப்பட்டு, அதனுல் இச்சை, அறிவு, செயல்கள் தொழிற்பாடின்றி - இருட்டறையில் உள்ளோன் ஒருவன் யாதொரு செயலுமின்றித் துன்பத்திற் கிடப்பதுபோலக் - கிடக்கும். (இதைக் கேவலாவத்தை என்ப.) அஃதறிந்த கருணையங்கடலாகிய இறைவன், அவ்வுயிர்களை அந்த நிலையி லிருந்து எடுப்பதற்குப் படிப்படியாக, அவற்றின் அறியா மையை நீக்க அந்தந்த உயிரின் மூலகன்மத்திற்கு ஏற்ப, உடலையும், கருவிகளையும், புவனங்களையும், உணவு முதலிய போகப் பொருள்களையும் படைத்துக் கொடுத்து, அராக தத்துவத்தால் உயிரின் இச்சையைக் கொஞ்சம் கிளர்த்தியும், வித்தையால் உயிரின் அறிவைச் சிறிது விளக்கியும், கலையால்

உயிரைத் தொழிலில் சிறிது செலுத்தியும் உயிரைச் சகலா வத்தையில் விடுப்பன் (சகலாவத்தை கலையோடு கூடிய நிலை.)

இந்நிலையில், உயிர், நெருப்பு மூட்டியவுடனே எழும் புகையினால் பொருள் நன்றாக விளங்க வராதது போலப், பதி, பசு, பாசம் என்னும் பொருள்களின் உண்மையறி யாது மயங்கித் திரிபாகக் காணும் பான்மையுடையதாகும்.

இவ்வாறு சில காலம் கழிய, உலக நூல் முதலியவற் றைக் கற்றும் கேட்டும், அதனால் சிறிது சிறிதாக அநுபவம் உண்டாக (மூட்டப்பட்ட நெருப்பு புகை அடங்கப் பெற்று மிளிரத் தொடங்கும்; அம் மிளிர்வால் பொருள்களின் உண்மைத் தன்மையை நன்றாக உணரமுடியாது மாறி மாறி உணர்வதுபோல) உயிர்கள் பதி முதலிய பொருள் களின் உண்மையைச் சரிவரக் காணமுடியாது மாறி மாறி உணரத் தலைப்படும்.

இந்த நிலையில் உயிர் சொற் பிரபஞ்சத்தையும் பொருட் பிரபஞ்சத்தையும் தான் என்றும், தன்னுடையது என்றும் உணரத் தலைப்பட்டு நிற்கும். இதுவே பாசஞான மாகும். அதாவது நாத தத்துவமுதல் பிருதிவி தத்துவம் வரையில் உள்ள பொருள்களைப் பற்றிய அறிவு. இதனால் நிலைத்த அஞ்ஞானம் உண்டாகுமே அன்றி மெய்ஞ்ஞானம் தோன்றாது.

இவ்வண்ணம் உயிர் பல பிறவிகளுள் வீழ்ந்து அந்தத் தில் இறைவன் திருவருள் துணை கிடைக்கப்பெற்றுத் தன்னைப் பற்றியும் உலகத்தைப்பற்றியும் ஏற்படும் பற்பல அநுபவங் களைக் கொண்டு, தனக்கும் உலகுக்கும் உள்ள சம்பந்தா சம்பந்தங்களை அறியத் தலைப்படும். படவே, உண்மையை ஓர்ந்து, தேகம் பூதங்களால் ஆக்கப்பட்டது; அது சடம்; அதில் விளங்கும் கரணங்களும் அவ்வாறே. உயிர் பொறி களால் சிறு விடயங்களை அநுபவிக்கும். அவை தீமையிலே செலுத்தும். போகங்களும் புவனங்களும் உயிர்க்குப் புறத்தே உள்ளனவாம். ஆகையால், உயிர்க்கும் தேகம், கரணம், புவனம், போகம் ஆகியவற்றிற்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்று நிச்சயமாக அறியும்.

அப்போது, நான் என்னும் போதம் - (அறிவு) மிக்கு, 'நான் அவைகளை அறிகிறேன்; அவைகள் என் கீழ் அடங்கி யுள்ளன; நான்தான் அவைகளை நடத்துகின்றேன்; எனக்கு

மேல் வேறு ஒரு பொருள் இல்லை' என்று உயிர் மகிழும். இதுவே பசு ஞானமாகும். இது நிலைத்த அஞ்ஞானமு மாகாமல் நிலைத்த மெய்ஞ்ஞானமு மாகாமல் ஆன்மாவைச் செருக்கில் அழுத்தி, மேன்மேலும் பிறப்பில் வீழச்செய்யும் திறமுடையது.

இவ்வாறு பலகாலம் கழிய, உயிர், "எனக்கு அறிவு இருந்தும், இதுவரையில் தேகம் முதலியவைகளை யான் என்றும் எனது என்றும் அறிந்திருந்தேனே; இப்போது நான் வேறு, அவை வேறு என்று அறிகின்றேனே; முன்னே அறியாது இருந்ததற்கும் இப்போது அறிதற்கும் என்ன காரணம்? இந்த அறிவு விளக்கம் எவ்வாறு உண்டா யிற்று?" என்று சிந்திக்க நேர்படும். உண்மை காண வேண்டும் என்னும் அவாவினால் தூண்டப்பெறும். அப் போது இறைவன் திருவருள் கைகொடுக்க முற்படும்.

ஞானாக்கினியானது மிளிர்தல் அடங்கி, மிதமாக நிலைத்து எரியத்தலைப்படும். உண்மை ஒவ்வொன்றாகச் சிறிது சிறிதாக விளங்கும். உயிர் அதற்குரிய (உவமை யிலாக்) கலைஞானங்களை ஓதவும் கேட்கவும் தலைப்படும். இடையிடையே தோன்றும் ஐயம் திரிபுகள் களையப்பெற்று உண்மையறிவு பிரகாசிக்கத் தொடங்கும்.

இந்நிலையில், உயிரானது "இதுவரையில் நான் தான் எல்லாம் என்று எண்ணியிருந்தேனே; இப்போது 'அல்ல' என்று என்னறிவை விளக்குகிறது வேறொரு பொருள் அல்லவா? அது என்னறிவிலும் பேரறிவுடையதல்லவா? என் அறிவு அந்தப் பேரறிவில் அடங்கிவிட்டதன்றே? ஆகவே, நான் அடிமை; அந்தப் பொருள்தான் ஆண்டவன்; அவன் எல்லாவற்றையும் அவ்வவ்வுயிரின் வினைக்கேற்றவாறு நடத்துகின்றான்; எனக்கென ஒரு செயல் இல்லை; அவன் இயக்க இயங்குகிறேன்; அவன் அறிவிக்க அறிகிறேன்; அவன் செய்விக்கச் செய்கிறேன்" என்று தெளிவுறும். நான் எனும் போதம் கொஞ்சம் கொஞ்சமாக நீங்க, ஞானாக்கினி மிக்கு நிலைத்து மிதமாக எரியத் தலைப்படும்.

இங்ஙனம், நிலைத்த அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ் ஞானத்தைப் பயப்பிப்பது நிலைத்த அருளாகிய இறைவன் திருவடி ஞானமாகும். இதுவே (உணர்வரிய) மெய்ஞ்ஞானம் ஆகும்.

இந்த மெய்ஞ்ஞானத்தின் பயனை நந்தம் தெய்வச் சேக்கிழார் பெருமான்,

“ சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்.”

என்னும் திருப்பாடலில் குறிப்பிட்டுள்ளார். அதன்பொருள் வருமாறு :—

தவ முதல்வர் சம்பந்தர் தாம் - முற்றவ விசேடத்தானே திருஞான சம்பந்தராகி விளங்கும் ஆளுடைய பிள்ளையார்

சிவன் அடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் - சிவபெருமானது திருவடியையே சிந்தித்தலாகிய திருவை வளர்விக்கும் ஞானமாகிய

உவமையிலாக் கலைஞானம் - ஒப்பில்லாத கலைஞானம் என்னும் அபர ஞானத்தினையும் (நூல் ஞானம் என்றவாறு அறிக.)

பவமதனை அற மாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம் - பசுத்துவ வாதனையைப் பற்றற நீக்கித் தெளிதலின் மேலாய் விளங்கும் ஞானமாகிய (பவம் ஈண்டுப் பசுத்துவ வாதனையைக் குறிக்கும் ; தெளிதல் என்பதைப் பாங்கு என்று உபசரித்தருளினர்.)

உணர்வரிய மெய்ஞ்ஞானம் - பாச பசு ஞானங்களானே அறிதற்கு அரிய மெய்ஞ்ஞானம் என்னும் பரஞானத்தினையும் (அநுபூதி ஞானம் என்றறிக.)

அந்நிலையில் - உபதேச ஞானப் பாலமிர்தம் உண்டருளிய அளவிலே (இடையீடு இன்றி ஓதாமே.)

உணர்ந்தார் - உணர்ந்தருளினர் - என்றவாறு.

உவமையிலாக் கலைஞானம் எனக் கலைஞானத்தை “ உவமையிலா ” என அடை கொடுத்து ஓதியருளினமையால், பாசஞானமாகிய நூல் ஞானத்திற்கும், மெய்ஞ்ஞானமாகிய அநுபூதி ஞானத்திற்கும் துணையாய் நிற்கும் கலைஞானத்திற்கும் உள்ள வேற்றுமை நன்குக அறிந்துகொள்ளற்பாற்று. முன்னது நிலைத்த அஞ்ஞானத்திற்குத் துணை நிற்பது ; பின்னது, அவ்வஞ்ஞானத்தைப் போக்கி, நிலைத்த மெய்ஞ்ஞானம் பெறத் துணை செய்வது. இது நாகாபரணனாகிய என்னினும் இனியானுடைய திருவருளால் அவனை

அடைந்து சீவ உபாதி ஒழிந்து பேரின்ப மாக் கடலில் திளைத்து நிற்பதற்கு அடையப் பெறுவது.

சீவ உபாதி ஒழிதல் என்பது உயிர் துன்பத்தினின்றும் நீங்குதல். அது ஆண்டவன் அருளால் நிகழ்வது. ஞானநுபவத்தால் இறைவனோடு இரண்டறக் கலந்து ஞேயமாகிய ஆண்டவனையும், ஞாதிருவாகிய ஆன்மாவையும் ஞானமாகிய திருவருளையும் வேறு பிரித்துக் காணாது, ஆநந்தத்தில் மூழ்கித் திளைத்துச் சிவமயமாய் இருத்தல். அப்போது நிலைத்த ஆநந்தம் மேலிட்டிருத்தலால், உயிர்க்கு உலக இன்பங்களும், இனிக் கடவுளுடன் கலந்து நிற்கிறோம் என்னும் எண்ணமும் தோன்றாது. தன்னை மறந்து தலைவனையும் காணாது ஞானமாகிய அருளையும் காணாது ஒரே இன்பமயமாய் இருந்து அவ்வின்பத்தில் அழுந்தி நிற்றல் கூடும். அப்போது நிலைத்த ஆநந்தம் மாத்திரம் உணரப் பெறும். மற்ற இன்பமோ துன்பமோ தோன்ற வாரா. கிடைத்தற்கரிய பரானுபவத்தைப் பெற்றபோது, பரமாநந்த மேலீட்டால் உண்மை ஞானிக்கு ஒன்றும் தோன்றாது.

இவ்வநுபவ நிலையை யாங்கள் அறிந்து உய்யவே மெய்ஞ்ஞானாசாரிய மூர்த்தியாகிய மாணிக்கவாசக சுவாமிகள் "திருப்படையாட்சி"யில் விளங்கவைத்திருப்பது உணர்ந்து இன்புறத் தக்கது.

ஆதலால், மெய்ஞ்ஞானம் இது வென்பதூஉம், அதன் உண்மை அநுபவப்பயன் ஈதாம் என்பதூஉம் மேல் முத்தி நிலையும் இதுவேயாம் என்பதூஉம் தெளியற்பாற்று.

ஞானத் தால்தொழு வார்சிவ ஞானிகள்
ஞானத் தால்தொழு வேன்உனை நானலேன்
ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாய்உனை நானும் தொழுவனே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூர் என்னும் பதியில் ஆதிசைவர் மரபில் சடையனார் என்பவருக்கும் இசைஞானியார் என்பவருக்கும் புதல்வராய்த் திருவவதாரஞ் செய்தார். இவரது பூர்வீகம் கயிலையில் சிவபெருமா

னுக்கு மலர்மாலை தொடுத்துத் தந்த ஆலாலசுந்தரர் ஆவர். தேவியாரின் சேடியர் இருவர்பால் அவருடைய மனம் இறைவனின்னருளால் போக்கிட, இப்பிறப்பெய்தப் பெற்ருர். இவருடைய பிள்ளைத் திருநாமம் "நம்பி ஆரூரர்" எனி னும் சுந்தரர் என்னும் பெயரே இப்பொழுது யாவரும் அறிந்த பெயராக நிலைத்து நிற்கிறது. இவருக்குச் சிவபெரு மான் தந்த காரணப் பெயர் " வன்றொண்டர் " என்பது.

எந்த சமயத்தில் அப் பெயர் அவருக்கு அளிக்கப்பட் டது என்பதை 17-ம் பதிகத்தில் " தன்மையினாலடியேனைத் தாமாட்கொண்ட நாட்சபைமுன், வன்மைகள் பேசிடவன் றொண்டன் என்பதோர் வாழ்வு தந்தார் " என்று பாடியுள் ளார். இவர் இளங் குழந்தையா யிருக்கும்போதே திருநாவ லூரை யாண்டுவந்த " நரசிங்க முனையரையர் " என்னும் மன்னர் இவரைத் தம்மரண்மனையில் வளர்த்து வந்தார். அவரையும் திருத்தொண்டத்தொகையில் ஓர் அடியவராகப் பாடி தம் நன்றியை " மெய்யடியான் நரசிங்கமுனையர்க் கடியேன் " என்று தெரிவித்துள்ளார். தம் பெற்றோரையும் புகழ்ந்து தம் பாடல்களில் ஆங்காங்குப் பாடியுள்ளார். "வன்றொண்டன்" எனப் பெயர் பெற்ற நாள் முதல் இவர் மூன்றாண்டுகளுக்குள் 6 பெரும் யாத்திரைகளையும், 5 சிறு யாத்திரைகளையுஞ் செய்து இரு திருமணங்களையும் முடித்துக் கொண்டு வாழ்ந்துள்ளார். அதற்குள் 18,000 பாடல்களையும் பாடியுள்ளார். அவருடைய பாடல்களே பன்னிரண்டு திருமுறைகளுள் 7-ம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளன.

மூவாண்டில் அவ்வளவும் சாதித்தா ரென்பது இக் காலத்து வியப்பாகவே யிருக்கலாம். இறைவனையே தோழமையாகக் கொண்ட சுந்தரர்க்கு இது ஒரு பெரிய காரியமல்ல. இன்னும் செயற்கரிய பல விந்தைகளைப் புரிந் துள்ளார். அவற்றுள் விந்தையிலும் விந்தையெனப் போற் றத் தகுவது " வாய்திறந்து முதலை கக்க மகனை அழைத்த " பேரருட் செயல். திருப்புக்கொளியூர்க் குளத்தில், இவர் அங்கு சென்ற காலத்திற்குச் சில ஆண்டுகட்கு முன், ஒரு பையன் முதலையால் விழுங்கப்பட்டுயிர் துறந்தான். அப் பையனின் நண்பனுக்குப் பூணூல் போடும் சுபச் சடங்கு நடந்துகொண்டிருந்த நாள் இவர் அவ்வூருக்குச் சென்ருர் கள். அதே சமயத்தில் ஓர் அழுகை ஒலியையுங் கேட்டார்.

கேட்டுக் காரணம் வினவ இறந்த பையனின் பெற்றோர் களின் வருத்தத்தைப் பொருது, அக்குளத்திற்குச் சென்று நோக்க அங்கு முதலையுங்காணோம், குளமும் வற்றியிருந் தது. "வருத்தப்படுவது வீண். தோன்றினது மறையும். தோற்றமும் மறைவும் உலக இயல்பு" என்றுதான் நம் போன்றவருக்கு வாய் வேதாந்தம் பேசத் தோன்றும். அவர் என்ன செய்தார். இறைவனை வேண்டிப் பாடினார். என்ன என்று பாடுகிறார்? இங்குதான் பிரார்த்தனையின் முறையை நாம் கற்றுக்கொள்ளல் வேண்டும். "அவிநாசியே பற்றாக வாழ்வேன் பசுபதியே—வழிபோவார் தம்மோடும் வந்துடன் கூடிய மாணிநீ ஒழிவதழகோ சொல்வாய்? அருளோங்கு சடையானே" என்று தாம் கடவுளையே (1) பற்றாக வாழ்வதையும் (2) அவர் எல்லா உயிர்க்கும் தலைவன் "பேரருளாளன்" என்பதையும் நினைப்பூட்டி அவருடைய சந்நிதியில் இவ்வாறு நிகழ்வது அழகல்லவே யெனப் பாடி அவ்வுண்மையை உறுதிப்படுத்துகிறார். அப் படிப் பாடப் பாடக் குளத்திலும் நீர் சுரந்தது. முதலையும் வந்தது. "கரைக்கால் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே" என வேண்டிப் பாடப் பிள்ளையும் வெளிப் பட்டான்.

• அப்படிப்பட்ட அடியார் பெருமையைச் சுந்தரரே உணர்ந்தவர். தம்மை "அடியார்க் கடியேன்" என்று சொல்லிக்கொள்ளும் அவாவுடையவர். அப்பர் பெருமான் உழவாரப்பணி செய்த திருவதிகையைக் காலால் மிதிக்க லாகாது என்று அஞ்சினார். ஞானசம்பந்தர் தோன்றிய சீர்காழிப் பதியின் உள் செல்ல அஞ்சி, வெளியே நின்று பாடினார். சிவனடியார் பெருமையைத் தம் "திருத்தொண்டத் தொகை"யில், சுந்தரர் பாடவில்லையானால், நாம் போற்றி வழிபடும் பெரியபுராணமாகிய 12-ம் திருமுறை நமக்குக் கிடைத்திருக்கமாட்டாது. எனவே சேக்கிழார் பெருமா னாரும் இவரைப் பெரியபுராணத்தில் 5 இடங்களில் போற் றிப் பாடியுள்ளார்.

அப்படி நமக்குப் பேருதவிபுரிந்துள்ள சுந்தரமூர்த்தி நாயனார் "களையா வுடலோடு" கயிலை சேர்ந்த நன்னாள் ஆடிச் சுவாதியாகும். இவ்வாண்டு அந்நன்னாள் ஆடிமீ 9உ (24—7—58) வியாழக்கிழமை நேரிடுகிறது. அந்த நாளில்

சிவாலயங்களிலும், சிவநேயச் செல்வர்களில்லந்தோறும் அவருடைய விழாவைக் கொண்டாடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். —— —மா. ப. தி.

கந்தரனுபூதி

மா. ப. தியாகராஜன், பி. ஏ.

கல்வியின் மெச்ச

வானோ புனல்பார் கனல்மா ருதமோ
ஞானோ தயமோ நவில் நான் மறையோ
யானோ மனமோ எனையாண்ட இடம்
தானோ பொருளாவது சண்முகனே.

கல்வியின் மெச்ச என்பது இப்பாட்டின் தலைப்பாகும். "கற்றதனு லாயபயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅ ரெனின்" என்ற திருக்குறள் வெண்பாவிற்கிணங்க ஒருவன் கல்விமான் என்று மதிக்கப்படவேண்டுமானல் இறை பொருளினையறிதென உள்ளத்துணர்தலேயாம். எனவே இப்பாடலில் பிரார்த்திப்பது சண்முகப் பொருள் யாது? என்பது.

சண்முகனே—ஆறுமுகப் பெருமானே ! பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் எனது மருள்நீங்க மெய்ப் பொருளினையறிதென எப்பொருளிலும் காண எனக் கருள் புரிவாய். அப்பொருள் வானோ - ஆகாயமோ ; புனல் - நீரோ ; பார் - நிலனோ ; கனல் - நெருப்போ ; மாருதமோ - காற்றோ ; ஞானோதயமோ - ஞான எழுச்சியோ ; நவில் நான்மறையோ - அந்தணர்களால் ஓதப்படும் இருக், யஜுர், சாம, அதர்வணம் என்று சொல்லப்படும் நான்கு வேதங்களோ; யானோ - நான் என்ற சொல்லால் சுட்டிக்காட்டப் படுவதும் "அகம் பிரம்மாஸ்மி" என்ற மகாவாக்கியத்தில் குறிப்பிடப்படும் அகம் என்னும் பதத்தின் லக்ஷியார்த்தப் பொருளோ, மனமோ - மனமடங்க வேண்டுமென்று சொல்கின்றனரே அம்மனமோ; எனையாண்ட இடம் - எனக்கருள் பாலித்த ஸ்தலமாகிய திருவண்ணமலையோ அல்லது அது போன்ற ஸ்தலங்களோ, பொருளாவது - நான் அடைய வேண்டிய மெய்ப்பொருள். இவைகளோ மற்று இதற்கன்னியமாய் அதீதமாய் இருப்பதோ? என வேண்டிநின்றபடி. இவை யாவுமல்லவென்று "வானன்று காலன்று

தீயன்று நீரன்று மண்ணுமன்று தானன்று நானன்று அசரீரியன்று சரீரியன்று'' எனக் கந்தரலங்காரத்தில் கூறி "அறிவை யறிவது பொருளென அருளிய பெருமாளே'' என்று திருப்புகழில் மெய்ப் பொருளினையதெனக் காட்டியுள்ளார். பொருளினையதெனத் தெரிந்துகொள்ள ஒரு ஏக்கம் வேண்டும். அதுவே முதற்படி "அபேட்சை'' எனப்படும். அப்படி ஏங்கி நிற்கும் நிலையில் அவனுணர்த்த உணர்வதே உண்மைப் பொருளாகும் என்ற கருத்தே, இவ்வனுபூதிப் பாடலால் உணர்த்தப்படுகிறது.

குறிப்பு:—கல்வி பயிலும் மாணவர்கள் இப்பாடலை ஆசாரத்துடன் தினம் மூலமந்திரத்துடன் ஜபம் செய்து வருவதுடன் எந்திரத்தை ஒரு ரக்ஷையாகக் கட்டிக் கொள்வார்களேயானால், அவர்கள் கல்வி பயிலும் சமயம் நல்ல கருத்துகள் தோன்ற ஆசிரியரும் பெரியோர்களும் மதிக்கத் தக்க நிலையில் மேன்மையுறலாம். இது அனுபவசித்தம். சில மாணவர்களுக்கு எவ்வளவு படித்தபோதிலும் கவனமில்லாக் காரணத்தினாலும், தேர்ந்து படிக்கும் ஆற்றலில்லாத் தன்மையாலும் படித்ததைக் கிரகிக்க முடியாத் தன்மையாலும் கல்வியில் தடைபல நேர்வதுண்டு. அப்படிப்பட்ட மாணவர்கள் நலம்பெற இப்பாடல் உதவும்.

மூலமந்திரம் — ஓம் கருங் கிறியும் நமஸ்து

நைவேத்தியம்—பால் பழம் சர்க்கரை.

இப்பாடலின் யந்திரம்



மற்று ஈண்டு வாரா நெறி*

உலகில் பிறந்த மானிடர் ஒவ்வொருவரும் துன்பமே அனுபவிக்கின்றோம் என்று கூறுகின்றனர். பிறவி வேண்டாமென்றுங் கருதுகின்றனர். எனவே, பிறவி வாராதிருத்தற் பொருட்டு நாம் நல்வழியிற் புகுந்து அதனைத் தடுக்க முயலுதல் வேண்டும். பிறவிக்குக் காரணம் யாதெனச் சற்று ஆராய்வோம். பிறப்பு யாவராலும் வெறுக்கத்தக்க இன்பம் இல்லாதது. மாட்சிமை இல்லாதது. அது மயக்கத்தால் வருவதே. பிறவியின்கண் துன்பமே, எந்நாளும் இன்பமே இல்லை. பசித் துன்பமும், நோய்த் துன்பமும் மிகுதியும் காணப்படுகின்றன. துன்பத்திலேயே இருக்க எவனும் விரும்பமாட்டான். ஆகவே அதனை ஒழிப்பதற்குச் சாதகம் என்னை? துக்கத்தை நினைந்து நினைந்து அதனிடத்து அஞ்சி, அஞ்சலென்று கூறும் இறைவனை உள்ளத்தால் உள்கி அவற்றினை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும். 'அஞ்ஞானம் பிரபோ துக்கம்' என ஆகமம் கூறுகின்றது. துக்கம் அறியாமையால் நிகழ்வதாகும். அதனால் பிறவி நேர்கிறது. துக்கம் நீங்க அஞ்ஞானம் ஒழிதல் வேண்டும். அஞ்ஞானம் அறுமாயின் பிறவி ஒழியும். எனவே, பிறப்பென்பது பேதைமையாயிற்று. 'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு' என்றார் திருவள்ளுவர். அறியாமையே பிறப்பாகும். வீட்டுக்கு நிமித்தகாரணமாகிய செம்பொருளைக் காண்பதே ஒருவர்க்கு மெய்யுணர்வாகும். சிறப்பென்பது எல்லாப் பொருளினும் உயர்ந்தது. உலக வழக்கில் இரத்தினத்தை எல்லாப் பொருளிலும் உயர்ந்ததென்று சொல்லுவதுபோல, இங்கு சிறந்த பொருள் செம்பொருளென்று சொல்லப்பட்டது. பொருள்களை மூன்றாகப் பகுக்கலாம். உலகம், உயிர், கடவுள் என மூன்று பிரிவுகளுண்டு. உலகமோ தோற்றக் கேடுகளுக்கு உட்பட்டது. உயிரோ நித்தியமாயினும் தூயதாந் தன்மை

---

*இது திருப்பாதிரிப்புலியூர் - ஸ்ரீலஸ்ரீ - ஞானியார் சுவாமிகள் சென்னையில் 1—10—1934-ல் நிகழ்த்திய சொற்பொழிவு. திரு. ரா. சண்முகசுந்தரம் செட்டியார் அவர்கள் குறிப்பு.

இல்லாக் காரணத்தினால் சிறப்பாக மாட்டாது. கடவுளோ தோற்றக்கேடுகளில்லாது நித்தமாய் தூயதாய் தான் எல்லாவற்றிலும் கலந்து நின்று முதற் பொருளாய் விகாரமின்றி என்றும் ஒரு தன்மையா யிருத்தல் பற்றிச் செம்பொருள் எனப் பெரியோர் கூறினர். இச் செம்பொருளைக் காண்பது மெய்யுணர்வாகும். காண்கின்ற செயல் பிறவியாகிய பேதைமையை நீக்கும். எனவே இறைவனை யடைந்தவன் பிறப்பினைப் போக்கிக்கொள்வான். பிறப்பை யறுத்தல் உயிர் தம்மால் முடியா. இறைவனால் தரவேண்டியதே. இப்பிறப்பை விடுதல் சிறப்பெனக் கொள்ளப்பட்டது. செம்பொருள் காரணமாக வருவது சிறப்பு. பேதைமை காரணமாக வருவது பிறப்பு. சிறப்பினை வீடு என்றுங் கூறுவர்.

நம்மவர் யாவரும் இரண்டு வீட்டின் கண்ணே குடிகொண்டிருக்கின்றோம். ஒன்று சரீரம். மற்றது மண் மரம் முதலியவைகளால் கட்டப் பெற்றதான நாம் குடியிருக்கும் வீடுகள். பகல் முழுவதும் வேலையில் அலைந்து உழன்று வீடு திரும்புவோர் தாம் பட்ட சிரமங்களைத் தணித்துக் கொள்ளுகின்றனர். உலக கஷ்டங்கள் போக்கப்படுவதாக முடிகின்றன. உடம்பாகிய வீடு இவைகளைப் போன்று சப்த தாதுக்களினாலேயே கட்டப்பட்டதாகும். இவ்விரண்டு வீடுகளும் எக்காலத்தும் உயிர்களுக்குச் சொந்தமாவதில்லை. குடியிருக்கும் வீடுகளில் எத்துணைத் துக்கம் விளைகின்றது? சரீரத்தில் குடியிருக்கும் ஆன்மாக்களுக்கும் உலக கஷ்டங்கள் துக்கத்தை அத்துணை விளைவிக்கின்றன. இத் துக்கங்களினின்றும் விடுதலையையே மோக்ஷம் சிறப்பு என்றும் கூறுவர். 'எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான், மெய்யே யுன்பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்' என்பது மணிவாசகம். இறைவனை அறியும் மெய்யுணர்வினால் இறைவன் கொடுக்கப்பெறுவது வீடு. இவ் வீடில்லாமல் துக்கத்தினை ஒழித்தற்கு இயலாது. எனவே பெருமானை அடைந்து வீடுபெற்றுப் பிறவாமல் இருத்தல் வேண்டும். இறைவனை அடைவது எப்படி? இறைவன் சச்சிதானந்த சொரூபம். சத்தாகியும், அறிவாகியும், ஆனந்த மயமாகியும் இருப்பவன். இது அருவமாயிருக்கும் நிலைமை. உருவத்திற்கு வாராத தன்மை. ஊனக்கண்ணினால்

பார்த்தல் அரிது. சிற்றறிவு கொண்ட உயிர்களினுலும் பேரறிவுடையோனை அறிதற்கும் சாலாது. துக்கத்தில் ஆழ்ந்தவன் ஆனந்தத்தை அநுபவித்தல் முடியாது. யாவராலும் போற்றப்படுவதாகிய அறிவு நூல்களும் தம்மால் காணமுடியவில்லை யென்று கதறுகின்றன. ஆதலால் இறைவனை அடைவது அசாத்தியம். வீடு பெறுதல் அவ்வளவே. இறைவன் அருள் செய்த ஞான்றே அவனைக் காணுதல் முடியும். அருட்கண்ணுடையவர்க்கே அரும்பெரும் பொருளாயிருக்கும் இறைவன் காட்சிப்படுவான்.

"அருட்கண் ணிலாதார்க் கரும்பொருள் தோன்று
அருட்கண் ணுளோர்க்கெதிர் தோன்று மரனே
இருட்கண்ணி னோர்க்கங் கிரவியுந் தோன்று
தெருட்கண்ணி னோர்க்கெங்குஞ் சீரொளி யாமே"

என்பது திருமூலர் திருமந்திரம். விளக்கமுடைய கண்ணுக்குச் சூரியன் காணப்படுகிறுன். கண் விளக்கம் இல்லாவிடத்துச் சூரியன் தோன்றான். அருட்கண்ணுடையோர்க்கு இறைவன் எதிர்ப்படுவான். இறைவனைக் காணுவதற்கு இறைவனது அருளைப் பெறுதல்வேண்டும். இறைவனது அருளும் உலகெலாம் ஆளுந் தன்மையது. இறைவனது அருளே பிறப்பை அறுப்பது. அருளாலே செம்பொருளைக் காண்பது இயலும் என்பது காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதியின் ஒரு பாட்டின் கருத்தாம். அவனருளைப் பெறும் மார்க்கங்கள் பல. பொதுவாக நாம் உய்வதற்குச் செய்யப்பட்ட வேதாகமங்களிற் கூறிய விதிகளைத் தழுவி விலக்குகளைத் தவிர்ப்பது நன்மையுடைத்தாம். தீயன தவிர்த்து நல்லன செய்வதனால் நல்லாரிணக்கம் நேரும். நல்லாரிணக்கம் எற்றுக்கெனின் அவர்கள் அருளைப்பெற்ற காரணத்தினலே சிவனருளை விரும்புபவர்களுக்குத் தாங்கள் சென்ற வழியிலே அவர்களைச் செல்லுவித்து அவர்களும் அவ்வருளைப் பெறுதற்குத் துணையாய் நிற்பர். பொற்கொல்லனும் ஒரு பொன் துண்டைக் கம்பி நீட்டுவதற்கு அதனை அடித்தடித்து கம்மீஸ் என்னும் ஓர் அச்சில் இழுக்கின்றுன். அக்கம்பி பெரியோர்கள் போலத் துணை நின்று அக்காரியத்தை முற்றுவிக்கும். பெரியோர்கள் துணைகொண்டு செய்யப்படுவன புருஷார்த்தங்களே. அவை அறம், பொருள்,

இன்பம், வீடு. முன்னர் மூன்றினில் ஒழுகி இறுதியில் வீடடைதல் வேண்டும். அறம் என்பது இல்லாளோடு பொருந்தியிருந்து தருமம் செய்தலும், வீடு, புத்திரர், பந்து, மித்திரர், செல்வம் இவைகளைத் துறந்து இறைவனையே பற்றுக்கோடாகக் கொண்டு ஒழுகுவதும் என இருவகைப் படும். இல்லறம் அன்பும், அருளும் உடையது. துறவறம் வேடங்களை அணிவது மாத்திரம் அன்று. இல்லறத்தில் வழுவாது ஒழுகி அறிவு உடையவராய்ப் பிறவிகளினால் வரும் தீமைகளுக்குப் பயந்து வீடு பேறு ஒன்றினையே கருதி முயற்சிப்பதாய் இருக்கின்ற அறம் துறவறம் எனப்படும். இத்துறவறம் வினைகளெல்லாம் நசுங்கி மனமானது தூய்மை யடையும்படிக் காக்கப்படும் விரதங்களும் அவ்வாறு தூய்மையான பின் தோன்றுவதாய ஞானமும் என இரு வகைப்படும். விரதம் என்றால் கார்த்திகை அமாவாசை முதலிய சுப நாட்களில் ஒருபொழுது உணவு கொள்ளல், இருபொழுது உணவு நீக்கியிருத்தல் என்று கொள்ளுதல் குற்றமாம். விரதம் என்றால் அருளுடைமை என்னும் அதிகாரம் ஆதியாகக் கொல்லாமை என்னும் அதிகாரம் இறுதியாகத் திருவள்ளுவரால் கூறப்படுவதைக் கொள்ளு தலே பொருத்தமுடைத்தாம். பிற உயிர்கள்மேல் வரும் துன்பம் கண்டு அதனை நீக்க மனங்கொண்டு இளகல். இவ் வருளுடையாரே பிற உயிர்களின் தசைகளின்மேல் இச்சை வையார். அவைகளை ஓம்புதல் வேண்டும் எனக் கருத் துடையவர் ; தன்னுயிர்க்கு வரும் துன்பங்களை யெல்லாம் பொறுக்குந் தவமுடையாராவர். தவத்திற் பொருந்துவ ராயின் கூடா வொழுக்கங்களை அறவே ஒழிப்பர். பிற ருடைமையை வஞ்சித்துக் கொள்ளக் கருதார். பொய் மையை அறவே ஒழிப்பாராவர். பொய்மை பற்றி நிகழ் வதாய வெகுளியை விட்டவர். தமக்குச் சின மூட்டுங் காரணம் பிறரிடத்திருப்பினும் கோபங்கொள்ளார். அந்தக் கோபத்தை யொழிப்பதற்குப் பிறருக்குத் துன்பம் விளைவிப் பது நிகழ்கின்றமையினால் அதனையுந் தகர்த்தவர். அறங்கள் எல்லாவற்றினும் சிறப்புடைத்தாய கொல்லாமையைக் கைக்கொண்டவர். இவ்விரதங்களை யுடையாரே அந்தக் கரணம் தூய்மை யடைந்தவர்களாய் ஞானம் பெறுவதற் குரியவராவர். ஞானமானது அறியாமை நீங்கிய வழி

கிடைப்பது. அதை வேதாமங்களினாலே பெறுவது ஒரு வகை; அனுபவத்தினால் பெறுவது மற்றொரு வகை. ஞானமே மோக்ஷத்துக்குச் சாதனம். ஞானம் என்பது வீடு பயக்கும் உணர்வு. அதனைப் பெறுவதற்கு வழிகள் பல. வீட்டின்பம் உலகப் பொருள்களிடத்துப் பெறும் இன்பத்தைக் காட்டிலும் மேலாயது. உலகப் பொருள்களோ காணப்படும் பொருள்கள்; கட்புலனுடைய காட்சிக்கு வருவன, அழியுந் தன்மையுடையன. எனவே, உலகம் அழியும். உலகம் அறிவில்லாதது. இவ்வாறு அழியுந் தன்மையை யுணர்வன உயிர்கள். அவை அழியா. ஆனால் உணர்வு கூடியன. அவ்வுணர்வும் சிற்றறிவே. பேரறிவுடையான் இறைவனாகும். அவனே அழியாதவன். அழியும் பொருள்களை எவனும் விரும்பான். உலகின்கண் செல்வம் முதலியன நிலையா. ஒருவன் பெற்றிருக்கும் யாக்கையும் நிலைக்குந் தன்மையது அன்று. ஒருவன் பெற்றிருக்கும் பொருளை, அவனது பாட்டனும், தகப்பனும், புதல்வனும் தங்கள் தங்களது எனக் கூறுவதைக் காண்கின்றோம். இவனுக்கு உரித்தாகப் பேசக்காண்கிலோம். ஓர் இடையன் பல வீடுகளிலிருந்து பிறர் பசுக்களை ஓட்டிச்சென்று மேய்க்குங் காலத்து ஒன்று வழி தப்பிக் காணமற்போயின் தன்னுடைய பசு காணமற் போனதென்று துக்கிக்கின்றான். பிறருடைய பசுவாயிற்றே யென்று கருதுவதில்லை. ஆங்கு ஒருவரது உடைமைப் பொருள் அவருடையதாகவே காணப்பெறவில்லை. பொருள்கள் எல்லாம் தமது உடைமைப் பொருள் என்று சொல்லுவதற்கில்லை. ஆகவே, அவற்றின் நிலையாமை யுணர்ந்து பற்று விடுதல் வேண்டும். இதனைப் புறப்பற்று விடுதல் என்று ஆன்றோர் கூறுவர். உயிர் பொருந்தியுள்ள உடம்பும் நிலையற்றது. பல பிறவிகளில் பல உடல்களைப் பெற்ற காரணத்தினால் ஓர் உடலும் ஒருவனுக்குச் சொந்தமாவதில்லை. யாக்கையின் மீது வைக்கும் பற்று அகப்பற்றென்பர். அதனையும் நீக்குதல் வேண்டும். இவ்விருவகைப் பற்றுக்களை விடுவதினாலே பிறப்பினுடைய இழிவை யுணர்ந்து வீட்டினது சிறப்பறிகின்றோம். இதுவே உண்மை யுணர்வாகும். வீடு பெறுதலென்பது பிறப்பினுடைய காரணங்களை யோர்தல். எடுத்த இப்பிறப்பு பிராரத்த வினையை யனுபவித்த பின்னரே

நீங்கும். அதனைச் சார்ந்துள்ள வினைகளாகிய சஞ்சிதமும் ஆகாமியமும் ஞான உணர்வைப் பெற்ற மாத்திரத்தே நீங்கும். பிறப்பின் காரணங்களை யுணர்ந்தவர்களாய்ப் பிராரத்த வினையைப் புசித்தற் பொருட்டு நிலவும் ஆன்மாக்கள் ஜீவன் முக்தர்கள் எனப்படுவர். அவர்கட்கு உலகப் பிரவிருத்தி உண்டெனினும் அவர்கள் உலகப் பற்றின்றி நடப்பர். மற்ற ஆன்மாக்களோ உலகப்பற்றை முழுதும் உடையவர். முத்தர்களுக்கும் பெத்தர்களுக்கும் உலக அனுபவம் வெவ்வேறே. முத்தர்களோ காமம், வெகுளி, மயக்கம் என மூன்றும் அறவே ஒழிந்தவர். அனாதியாய் வருகின்ற அஞ்ஞானமும், அதைத் தொடர்ந்து வரும்படியான யான் எனது என்று மதிக்கும் அகங்காரமும், அகங்காரத்தால் நிகழும் அவாவும், அவ்வவா தூண்டுதலின் மேல் பொருள்களிற் செலுத்துகின்ற ஆசையும், அப்பொருள் கிடையாத வழிப் பொங்குகின்ற கோபமும் எனக் குற்றங்கள் ஐந்து. இவ் வைந்தையும் காமம், வெகுளி, மயக்கம் என மூன்றினுள் திருவள்ளுவர் அடக்கினர். அகங்காரம் அஞ்ஞானத்துள் அடங்கும். அது மயக்கம் எனக் கூறப்பட்டது. ஆசை அவாவின் கண்ணடங்கும். அது காமமென்று அழைக்கப்பட்டது. கோபம் என்பது வெகுளி. இம்மூன்று குற்றங்களினின்றும் அறவே நீங்கியவர்கள் முத்தர்கள். முற்றும் ஒழிந்தவர்கள் என விளக்கும் பொருட்டு,

“ காமம் வெகுளி மயக்க மிவை மூன்றன்
நாமங் கெடக்கெடு நோய் ”

எனத் திருக்குறளில் வந்தவாறு காண்க. இக்குற்றங்களைப் பெயருமில்லாது செய்தல்வேண்டும். ‘அற்றது பற்றெனின் உற்றது வீடு’ என்பது திருவாய் மொழி. அறுவது மிகக் கஷ்டம். அற்ற பின்னரே ஞானம் உதிக்கும். ஞானம் மூன்று வகை. கண் இந்திரிய முதலிய வழியாய் வருகின்ற உணர்வு பாசஞானம் எனப்படும். உயிரினது அறிவு பசுஞானம். இறைவனை அறியும் அறிவு பதிஞானம் என்பர். முன்னவை இரண்டும் பிரயோஜனமில்லாதது. பதிஞானம் ஒன்றே பிரயோஜனமுள்ளது. பசு பாச ஞானங்களினாலே இறைவனைக் காணுதல் இயலாது. பதிஞானம் பெற்ற ஒருவனே அவரைத் தரிசிப்பன்.

'பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தால் நேசமொடு உள்ளத்தே நாடி' என்றருளினர் அருணந்தி சிவாசாரியர். உபநிஷத்துக்களும் அவ்வாறே கூறுகின்றன. பதிஞானம் பெறும் வழி என்னை? அதனைப் பெறுதல் உபாசனையால்தான் இயலும். உபாசித்தல் என்பது பலகால்மனம் ஒருமுகப்பட்டு இறைவனைத் தியானிப்பது. மனம் நிற்றற்கு வழியாயிருப்பது. உபாசனை முதிர்ந்தவழி இறைவன் எதிர்ப்படுவான். அரிசி பெறுவதற்கு நெல்லைப் பல முறை குத்துகிறோம். உமிகளையும் தவிட்டையும் நீக்கிய பின்னரே அரிசி உபயோகத்திற்கு வருகின்றது. அதுபோலவே உயிர்கள் மாட்டுள்ள குற்றங்களை (உபாசனையாகப் பல முறை தியானித்தால்) நீக்கின காலத்து இறைவன் காட்சிக்குப் புலனாகின்றான். உபாசனைக் காலங்களில் ஐந்து யக்ஞங்கள் செய்யப்படுகின்றன.

முதலாவது கர்ம யக்ஞம். கர்ம யக்ஞத்தை முன்னே செய்யென்பது பல ஆசாரியர்களின் கூற்று. கர்மங்கள் என்பன சமயானுட்டானம், (காலா காலங்களிற் செய்யப்படுவனவாகிய கர்மங்கள்) அவையே நித்திய கர்மங்களாம். பிராணாயாமம் அதற்கு அங்கமாகும். பிராணவாயுவானது ஓர் முறை யின்றி உஸ்வாச நிஸ்வாசமாகச் சலித்துக்கொண்டிருக்கும். அப்படிச் சலிப்பதினால் ஆசாபாசங்கள் மிகுகின்றன. அவை ஒழிதற்குப் பிராணவாயு பந்தம் செய்தல் முறை. ஆயாமம் என்பது தடுத்தல் எனப்பொருள்படும். ஆகவே பிராணாயாமம் என்றது பிராணவாயுவின் வேகத்தைத் தடுத்தல் என்பதாம். வேகமாய்ச் செல்லுங் குதிரையைக் கடிவாளங்கொண்டு தடுத்து நடத்துவதுபோல் பிராணாயாமத்தினாலே மனதினுடைய வேகத்தைப் பிராணவாயுவினுடைய வேகத்தைக் குறைப்பதினால் குறைத்து ஒருமுகப் படுத்தல் வேண்டும். இதற்கு மந்திரங்களும் துணை செய்கின்றன. ஒன்றியிருந்து நினைவதற்குக் கர்மயக்ஞம் சாதனமாகின்றது.

இந்திரியங்களை அடக்குவதற்கு விரதங்களை அனுஷ்டித்தல் வேண்டும். இதனைத் தபோயக்ஞம் என்று கூறுவர். இந்திரியங்கள் மூலமாக வருகின்ற அவாக்களைத் தடுத்தலே இந்த யக்ஞத்தின் காரியம். மந்திரம் ஜெபித்தல் ஜெப யக்ஞம். அதர்வசிகையும் மந்திரம் ஜெபிக்கின்றவனே

தூய்மையுடையவன் என்று கூறுகின்றது. மந்திரங்களில் உயர்ந்தது திருவைந்தெழுத்து. அதனைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் நன்னெறியடைவர். அம் மந்திரம் வேதம் நான்கினுக்குள் மெய்ப்பொருள். அது இறைவனுடைய நாமம். அம்மந்திரம் அன்னியர் காது படாமல் ஜெபித்தல் உத்தமம். பிறர் காதுபடச் சொல்லல் மத்திமம். அடிநாக்கின் அசைவில்லாமல் ஜெபித்தலே முறைமை. சிவாசாரியரை யடைந்து தீட்சை பெற்றவரே அதனைச் செபித்தற்கு அருகராவர். தீட்சையில்லாதவர் பஞ்ச புராணத்தை யேனும் ஓதுதல் வேண்டும். பஞ்ச புராண மென்பது, சம்பந்தர், அப்பர், சுந்தரர் இவர்கள் பாடிய தேவாரங்களில் ஒன்றும், திருவாசகம் திருக்கோவையாரில் ஒன்றும், திருவிசைப்பா ஒன்றும், திருப்பல்லாண்டு ஒன்றும் பெரிய புராணத்துள் ஒன்றும் ஆக ஐந்து பாடல்களேயாம். பெண்களும் இதனைக் கற்றற்கு உரியராவர். அவர்களும் நித்தமும் ஓதல் வேண்டும். கர்மயக்ஞம் தபயக்ஞம் ஜெப யக்ஞம் ஆக இம்மூன்றும் தியானம் கூடுவதற்குச் சாதகமாகின்றன. கொக்கு நாரைகளைப் போன்ற அசைவற்ற நிலைமையைப் பழகல் வேண்டும். மீன்கொத்திப் பறவை போன்று குறித்த இலக்கினின்றும் தவிராதிருத்தல் வேண்டும். இடுப்பு, கழுத்து, தலை முதலியவைகளை ஒரு நேராக நிறுத்தி இறைவனைக் குறித்துத் தியான உணர்வு பெறுதல் வேண்டும்.

" குறியைக் குறியாது குறித் தறியும்
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே "

என வரும் கந்தரனுபூதித் திருப்பாட்டின் கருத்தை நோக்குக. தியானத்தின் பயன் அகங்காரம் அறச் செய்தல். அகங்காரம் அற்றவனே இறைவனுக்கு ஞானபூஜை செய்யுந் தொழிலில் முற்படுவான். அதுவே ஞான யக்ஞம். ஞான நூல் ஓதல், ஓதுவித்தல், நற்பொருளைக் கேட்பித்தல், தான் கேட்டல், அதனைச் சிந்தித்தல், இவ்வைந்தும் இறைவனடி அடைவிக்கும் எழில் ஞானபூசை. ஞான நூல்கள் பக்குவர் களுக்கு ஏற்ற புத்தகங்கள். ஞான நூல்களினுடைய

பயனும் தன்னை யறிந்து உலகத்தின் தன்மையை யுணர்ந்து இறைவனை அடைவதே. ஞானம் ஒன்றே இறைவனை அடைவிக்கும். இறைவனை அடைதலாவது அவனுடைய வியாபகத்துள் அடங்கி நிற்றல். இறைவன் ஆன்மாக்களை இழுக்குந் தன்மையுடையவன், காந்தம் இரும்பை இழுப்பதுபோன்று. காந்தம் அசையாது நின்று இரும்பை இழுக்கும். இரும்புக்கே அசைவு காணப்படுகிறது. இறைவனும் இரும்பைப் போன்று நிருவிகாரியாய் நின்று உயிர்களைத் தன் வசமாக்குவான். இறைவன் தன்னைச் சார்ந்த ஆன்மாவைத் தன் வண்ணமாக்குதற்கு அவ்வுயிரினிடத்துள்ள மலங்களைப் போக்குவன். நெருப்பானது தன்னிடத்தே காயவைத்த இரும்பை அதனிடத்துள்ள கறையினைப் போக்கித் தன் வண்ணமாயிருக்கும் சிவப்பினை அவ்விரும்புக்கு ஏற்றுவது போல. சிவன் வசமாய் நின்ற உயிரும் சிவத் தன்மையை அடைகின்றது. நீரின் கண்ணே கலந்த உப்பு அந்நீரிடத்து ஒவ்வொரு திவலையினும் காணப்படுவதுபோல், சிவத்தினுடைய குணமெல்லாம் அடைந்த உயிரினிடத்தே காணப்படுகின்றது. உயிர்கள் எண்குணங்களைப் பெறுகின்றன. ‘எண் குணத்துளோமே’ எனும் அப்பரது மொழியாற் கண்டு கொள்க. இரசகுளிகை செம்பை யுருக்கித் தன்னோடு கூட்டி வேதித்துப் பொன்னாகச் செய்தும் பொன்னியல்பைக் காட்டாது தன்னுள்ளடக்கிக் காட்டுமாறு போல இறைவன் உயிரை அன்பினால் உருகச் செய்து தன்னைச் சாரவும் செய்து, தன்வயமாக்கித் தன் குணங்களைத் தந்து, உயிரினது இயல்பு சிறிதுந் தோன்றாது, அறிவிறந்து நிற்குமாறு தனது வியாபகத்துள் அடக்கிக் கொள்வன். இக்கருத்தினை,

“ இரும்பைக் காந்தம் வலித்தாற் போலியைந்தங் குயிரை
யெரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத்தா னாக்கி
யரும்பித்திர் தனத்தையன லழிப்பதுபோன் மனத்தை
யறுத்தமல னப்பணைந்த வுப்பேபோ லணைந்து
விரும்பிப்பொன் னினைக்குளிகை யொளிப்பதுபோ லடக்கி
மேளித்துத் தானெல்லாம் வேதிப்பா னாகிக்
கரும்பைத் தேனைப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியையொத் திருப்பனந்த முத்தியினிற் கலந்தே ”

எனச் சிவஞானசித்தியார் விளக்குவதாகும். இங்ஙனம் ஒடுக்கிக் கொண்ட உயிர் மீண்டும் பிறப்பதில்லை. வெல்லம், தேன், கருப்பஞ்சாறு முதலிய சுவைப் பொருளெல்லாம் கலந்த வழி உளதாகிய சுவையானது இது வெல்லத்தின் சுவை, இது தேனினது சுவை, கருப்பஞ்சாற்றின் சுவை எனப் பிரித்து அறிய வாராமையைப்போல இறைவனும் உயிரின்கண் கலந்த வழி இவ்வியல்பிற்று எனப் பிரித்தறிய முடியாத இன்ப சொரூபமாய்த் தலைப்படுகின்றான். அந்த இன்ப சொரூபமே வீடாகும். அதுவே பிறவியை யொழிப்பது. ஈண்டு வாராதிருக்கும் நெறியே யாகும்.

இச்சொற்றொடர் திருக்குறளின்கண் மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்துள் ஆறாவது செய்யுளாகும். அது,

> " கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
> மற்றீண்டு வாரா நெறி "

என வரும். ஈண்டு என்றது இப்பிறவியாகிய மக்கட் பிறவி. இப்பிறவி பெறுதற்கு அரியது என்பர். அரியதாயின் அது வந்த பின்னரேனும் அதனைப் பயன்படுத்துதல் வேண்டும். பெறுதற்கரிய பிறவியைப் பெற்றவர் பிரானடியை நாடுதல் முறைமை. நாடுதலாவது உபதேச மொழிகளை அனுபவ முடைய தேசிகர்பாற் கேட்டல். இது கற்று எனும் பதத்தினாலே அறியக் கிடக்கின்றது. தேசிகன் கற்பித்த வழியே நிற்றலினாலே அரிதாயிருக்கும் மெய்ப்பொருளைக் காணத் தலைப்படுவர். மெய்ப்பொருள் காண்பது மிகக் கடினமானதால் பலரிடத்துப் பலகாலுஞ் சென்று பயில்வது நன்று. கண்டவர் முற்சொல்லிய ஐந்து யக்ஞங்களை முடித்து இறைவனை உணர்ந்தவர். மற்று எனுஞ்சொல் மீண்டு என்னும் பொருளின்கண் வந்தது. 'இவ்வுலகத்தின்கண் மீண்டும் பிறக்கும் நெறியை யடையார். இறைவனை உணர்ந்தவர்கள் பிறவியடையார் என்பது கருத்து. இவ்வுலகத்தின்கண் வாராது மெய்ப்பொருளாகிய சிவனிடத்தே பொருந்துவர். பிறவித் துன்பமின்றி நித்திய சுகத்தின் கண்ணே பிறழாது நிற்பர்.

பொய்க்கால் குதிரை

திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.எ., பி.எல்.

திருவிழாக்களிலே ஆடல்பாடல்கள் நடத்துவது உலக மெங்கும் காணக்கூடிய ஒரு செய்கை. சமயத்தொடர்பு பெற்ற தொழுகை முதலிய செயல்கள் ஒருபுறம் இருக்க, மக்களைக் களிப்பிக்க வல்ல ஆடல்பாடல்கள் மறுபுறம் நடத் தப்பெறும். மேல் நாடுகளைப் பார்க்கிலும் நமது நாட்டில் இவைகள் மிகுதியாகப் போற்றப்படுகின்றன. பெருங் கோயில் திருவிழாக்களில் மட்டுமல்ல, சிறிய ஊர்த்தேவ தைக் கோயில்களிலும் இச்செய்கைகளைக் காணலாம். பெருங்கோயில்களிலே பெருந்திரளாக மக்கள் கூடியிருப் பார்கள். மூர்த்திகளைப் பல வாகனங்களின் மீது எழுந்தரு ளப்பண்ணித் தேர் வீதிகளில் எடுத்துச் செல்லுவார்கள். அவைகளிலே தேர்மீது எழுந்தருளச் செய்வது மிகச் சிறந் தது. இத்திருவிழாக்களிலே பலவித இசை இயங்கள் நடை பெறும். திருமறைகள் ஓதப்பெறும். யானை, தோரணம், விதானம், சௌரி முதலியவைகள் கொண்டு செலுத்தப் பெறும். இவைகளைக் காண்பதற்குக் கணக்கற்ற மக்கள் கூடுவார்கள். இவ்வாறு மக்கள் கூடுகையில் அவர்களுடைய உணவு முதலியவைகளைத் தருவதற்குக் கடைகள் திறக்கப் படும். சிறுவர் சிறுமியர்களுக்கு விளையாட்டுப் பொருள் கள் விற்கப்படும். நாடகக்காரர்கள் கூத்துக்களை நடத்திப் பணம் ஈட்டுவார்கள். இவைகளைக் கண்டு பிச்சை ஏற்கப் பிச்சைக்காரர்களும் நிரம்புவார்கள். அவர்களுக்கும் துறவி களுக்கும் உணவு அளிப்பது அறம் எனச்சொல்லிப் பல செல்வர்கள் அறச்சாலைகளை நிறுவுவார்கள். இவ்வாறு பெருங்கோயில்களிலே நடைபெறுவது இயல்பாகி விட்டது.

இனி நாட்டுப்புறங்களில் ஊர்த்தேவதை கோயில்களி லும் இவ்வாறே நடைபெறுவதுண்டு. அங்கேயும் ஆடம் பரங்கள் உண்டு. ஆனல் அவைகள் தாழ்ந்த முறைகளில் நடைபெறும். நாகசுரவாத்தியத்திற்குப் பிரதியாகப் பகல் வேடங்களும் தப்பட்டைகளும் நாடகம் கூத்து முதலியவை களுக்குப் பிரதியாகப் புலி வேடங்களும் காணலாம். குடை ராட்டினங்களும் சுற்று ராட்டினங்களும் விளையாடல் களாகத் தோன்றும். கரகம் எடுப்பதும் காவடி எடுப்பதும்

சிறந்த கொண்டாட்டங்கள். இவ்வாருகச் சில வேறுபாடுகள் இருந்த போதிலும் பொதுவாக இரண்டிலும் ஆடம்பரங்கள் மக்களைக் களிப்பிப்பது என்ற ஒரே கருத்தின்பாற்படும்.

இவ்வித ஆடம்பரங்கள் நாட்டிற்குத் தக்கபடியும் வருவாயிற்குத் தக்கபடியும் பெருமை கொண்டு விளங்கும். சோழநாட்டில் ஆலயங்கள் பெரிதாகவும் பொருள் வருவாய் மிகுதியாகவும் இருப்பதனுல் ஆடம்பரங்கள் வியக்கத்தக்கவைகளாக இருக்கும். திருவிழா ஊர்க்கோலங்களில் பொய்க்கால் குதிரை, மயிலாட்டம்; கரக ஆட்டம், காவடியாட்டம் முதலியன நடைபெறும். இவைகளிலே பொய்க்கால் குதிரை என்பது வெகு சிறப்பாக உள்ளது. சிறு வயது முதற்கொண்டே இந்த ஆட்டம் பழக்கப்பட்டு வரவேண்டும். இது பொது மக்களை மிகவும் வசீகரிக்கும். உலாவிற்கு முன்னே இது ஆடிக்கொண்டு போகப் பொது மக்கள் இந்த வேடிக்கையில் மிகவும் ஈடுபட்டுக் களிப்பார்கள்.

இரண்டு பேர் இடுப்பில் இலேசான தடுக்கினல் செய்த குதிரை உருவங்களை இணைத்துக்கொண்டு காலுக்கு மரக்கட்டைகளை ஒருஅடி உயரத்தில்கட்டிக்கொண்டு நாட்டியம் ஆடுவதே பொய்க்கால் குதிரை ஆட்டம் ஆகும். அவ்விருவரில் ஒருவன் ஆண் வேடமும் மற்றவன் பெண் வேடமும் போட்டுக்கொண்டு ஆடுவார்கள். இவ்விருவரும் ஒருவரை ஒருவர் பார்க்கும் வண்ணமாக நின்றுகொண்டு ஆடுவார்கள். நாகசுரம், தாளம், மத்தளம் முதலிய இசைக்கருவிகளைக் கொண்டு வாத்திய இன்னிசை பரப்புவார்கள். ஆடகர்களோ அந்த இசைக்கும் தாளத்திற்கும் ஏற்பக் கால்களை ஊன்றிக்கொண்டு உறுப்புக்களை அசைத்துக்கொண்டு கைகளை ஆட்டிக்கொண்டு கண்களையும், தலைகளையும் கம்பீரமாக அசைத்துக்கொண்டு ஆடுவார்கள். ஆண் வேடக்காரன் முதலில் ஆட அதனை உற்று நோக்கிக் கொண்டிருக்கும் பெண் வேடக்காரன் அவன் ஆட்டம் நின்றவுடன் அதற்கு விடை கொடுக்கிருற்போல ஆடுவான். பிறகு அதனைத் தொடர்ந்து ஆண் வேடக்காரன் ஆடுவான். இவ்விதமாக ஊர்க்கோலம் முழுவதும் ஆடிக்கொண்டே செல்வார்கள். இந்த ஆட்டம் குறைந்தது மூன்று அல்லது நான்கு மணி நேரம் ஆடப்படும். இந்த ஆட்டம் ஆடும்போது பார்க்

கும் பொது மக்கள் தெருவில் வட்டமாக நின்றுகொண்டு பார்ப்பார்கள் இடுப்பில் கட்டியிருக்கும் குதிரைகள் தோளோடு பிணைக்கப்பட்டிருக்கும். எத்தனை நேரம் குதித்தாலும் அது பிறழாதபடி கெட்டியாகக்கட்டியிருப்பார்கள். பார்வைக்கு ஒரு குதிரை மேல் ஏறிச் சவாரி செய்வது போலக் காணப்படும். குதிரைக்குத் தலையும் உடலும் வாலும்தான் இருக்கும். கால்களோ ஆடுகிறவனுடைய கால்கள்தான். குதிரை இலேசான மூங்கில் தடுக்கினால் பின்னப்பட்டு அட்டைகளால் வேயப்பட்டுப் பலநிறக் காகிதங்களால் ஒட்டப்பட்டுக் குன்னப்பட்டையால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். தலையில் மூக்கு செவி வாய் முதலியவைகள் உண்மை உருவம்போல ஆக்கப்பட்டு வர்ணங்கள் பூசப்பட்டிருக்கும். சர்க்கஸில் குதிரைகள் ஆடுகிறதைப்போல இந்தப் பொம்மைக் குதிரை ஆடகர்களும் ஆடுவார்கள். இடசாரி, வலசாரி, முன்சாரி, பின்சாரியாகப் போயும் தலை தூக்கியும் தாழ்த்தியும் முதுகை அடித்தும் தலையை ஏறிட்டும் இன்னும் பலவிதமாகவும் ஆடிக் காட்டுவார்கள். இசையில் வாசிக்கும் பாட்டின் பொருளுக்கு ஏற்றபடி அவர்கள் நாட்டியமும் இருக்கும். இந்த ஆட்டத்தைக் கண்டு மக்கள் பெரிதும் களிப்பார்கள். இந்த ஆட்டம் பெரும்பாலும் இரவில் நடக்கும். விளக்குகளின் ஒளியில் குதிரைகளின் தோரணை ஒன்றுக்குப் பத்தாக எடுத்துக் காட்டும். வேடக்காரர்களும் தங்கள் உடலையும் தலையையும் வெகு அழகாக உடைகளாலும் நகைகளாலும் பூட்டிக்கொண்டு விளங்குவார்கள். ஆடவன் தலையில் கிரீடமும் பெண் தலையில் தலையலங்காரமும் முகத்தில் நிரம்ப நகைகளும் பூட்டிக் கொண்டு விளங்குவார்கள். போலி நகைகள் விளக்கொளியில் உண்மை நகை போலத் துலங்கும். மலைநாட்டுக் கைக் கொட்டிக் களிபோல் ஆடகர்கள் கைகளை விரித்தும் தூக்கியும் ஆடுவார்கள். ஆடகர்கள் கால்களில் ஒரு அடி உயரமுள்ள கட்டைகளைத் தக்கபடி இணைத்துக் கட்டிக்கொண்டிருப்பார்கள். நிலத்தில் எவ்வளவு குதித்தாலும் கால் நோகாதபடி இணைத்திருப்பார்கள். இந்தப்படி வேடம் போடுவதற்கே பல மணி நேரம் பிடிக்கும். பிறகு ஆட்டம் ஆடி முடிந்து வேடங்களைக் கலைப்பதற்கு வெகு நேரம் ஆகும். ஆகவே இந்த ஆட்டம் வெகு சிரமமானது என்று

அறிய வேண்டும். இதனை முழுதும் அறிந்தால் இதுவும் ஒரு அரிய கலையென்றே கூறவேண்டும். இத்தனை சிரமத்திற்கும் ஒரு நாள் ஆட்டத்திற்குப் பத்து ரூபாயும் கிடைக்காத நிலையில் இந்தக் காலத்து ஆதரவு இருக்கிறது.

இனி பொய்க்கால் குதிரை, தோற்பாவை, பொம்மலாட்டம், பாம்பாட்டம் முதலிய வேடிக்கை ஆட்டங்கள் பாரதநாட்டுத் தனி யாட்டங்கள் என அறியவேண்டும். இவைகள் பிறநாடுகளிலிருந்து இந்த நாட்டிற்கு வந்தவைகள் அல்ல. இவைகளில் பொய்க்காற்குதிரை, தோற்பாவை என்பவைகள் தென்னாட்டிற்குச் சிறப்பாய் ஏற்பட்டவைகள். அப்படியாயின் பண்டைய நூல்களில் இவைகள் கூறப்பட்டிருக்கின்றனவா என்றும், இவைகள் எந்தக் காலம் முதற்கொண்டு ஆடப்பட்டு வருகின்றன என்றும் ஆராய்ந்தால் நலம் அல்லவா?

ஆறாம் நூற்றாண்டில் நடந்த திருவிழா விவரங்களைத் திருநாவுக்கரசர் திருவாரூர்த் திருவாதிரைப் பதிகத்தில் கூறியிருக்கிறார். அதில் திருவாரூரில் திருவாதிரைத் திருவிழா காணச்சென்றபோது தான் நேரில் கண்ட காட்சியை வெகு விளக்கமாகக் கூறியிருக்கின்றார்.

'முத்தால் ஆகிய விதானங்கள் மேலே அலங்கரிக்க மணியும் பொன்னும் குயிற்றிய கவரிகள் தொங்கத் தெருவழியே பத்தர்கள் பாவையர்கள் புடைசூழ விறலியர்கள் சென்றார்கள். நல்லார்களும் தீயார்களும் தங்கள் பிணி எப்போது போகும் என்று தவம் கிடப்பார்கள். வீதிகளிலே வெண்கொடிகள், மேல் விரிப்புகள், மணிகள் தொங்கப் பவளமுத்து மாலைகள் தொங்க அழகு சொரிந்தன. சங்கு, பறை, சல்லவடங்கள் வாசிக்க, மயில்கள் அது கேட்டு மழை யென்று மயங்கிக் களிப்போடு ஆடுவன' என்று கூறுகின்றார்.

இனி 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்திகள் காலத்தில் சேரமான் பெருமாள் திருவாரூர் சென்றபோது சில களியாட்டங்கள் நடத்தப்பட்டன என்று சேக்கிழார் சுவாமிகள் கூறுகின்றார். (கழறிற்.126) நிலைச் செண்டு, பரிச் செண்டு, தகர்ப்பாய்ச்சல், முடக்கணைக்கால் வாரணப் போர், புள்ளின் அமர் முதலியவை நடத்தப்பட்டனவாம். அவைகள் முறையே பந்து விளையாடல், குதிரை மீது

அமர்ந்து பந்து விளையாடல் (Polo), கோழிச் சண்டை, புள்ளினச் சண்டை முதலியனவாகும்.

இவைகளுடனே குதிரை விளையாடல் இருக்கக் கூடும் அல்லவா? மீண்டும் சுந்தரமூர்த்திகள் திருவஞ்சைக்களம் சென்று சேரமான் பெருமாளின் விருந்தினராக இருந்த போது அவரைக் களிப்பிக்க 'பாடல் ஆடல் இன்னியங்கள் பயிறல் முதலாம் பண்ணையினில் நீடும் இனிய விநோதங்கள் நெருங்கிக் காலம் தோறும் நிகழ மாடு விரைப்பூந் தருமணம் செய் ஆராமங்கள்" வைகுவித்ததாகச் சேக்கிழார் கூறுகிறார். மேலும் செண்டாடும் தொழில், சிறு சோற்றுச் சிறப்பு, நீர் விளையாட்டு, யானைப்போர், சலமற்போர் முதலியன செய்யப்பட்டனவாம்.

இறுதிக்காலத்தில் சுந்தரமூர்த்திகள் வெள்ளானையின்மீது கயிலை ஏக, அதுகண்ட சேரமான் தம் பரியின்மீது ஏறிச் சிவ மந்திரம் ஓதிட அப்பரி அவரைத் தூக்கிக்கொண்டு வெள்ளானையை வலஞ் செய்துகொண்டே ஏகிற்றும். இதனுல் பரியேற்றம் அந்நாளில் சிறப்பிக்கப்பட்டது என்க.

திருவாதவூரடிகள் வரலாற்றைக் கூறிய பரஞ்சோதியார் இறைவன் பரிமேல் அழகனுய் வந்தபோது குதிரையைப்பல விதமான ஆடல்களைக் காட்டி வியப்பித்ததாகக் கூறுவர்.

மேலும் திருவாசகத்தில் வாதவூரடிகள் பரிமேல் அழகனை வருணித்த பகுதியில் அவரது தோற்றத்தைக் கண்டு காதலால் மயங்கிய காரிகையின் சொற்களைக் காணில் பரியாடலின் சிறப்பை அது கொண்டிருக்கும் என அறியலாம்.

"பள்ளிக் குப்பாயத்தர் பாய்பரிமேல் கொண்டென்
உள்ளங் கவர்வரால் அன்னே என்னும்"

என்ற அடிகளின் உட்கருத்தைக் காண்க.

அடியார்களின் வாக்கே தவிர, சிந்தாமணி மாக்கதை முதலிய காப்பியங்களிலும் குதிரை ஆட்டத்திறத்தை ஆங்காங்கு வியந்து கூறியிருப்பதை அறியலாம். ஆகவே பண்டைத் தமிழரில் குதிரை யாட்டம் குதிரை யேற்றம் இவைகள் சிறந்திருந்தன என அறியலாம். கோயில்

திருவிழாக்களிலும் இறைவனுடைய வாகனம் சிறந்திருந்து விளங்குவதை அறியக் கூடும். மற்ற வாகனங்கள் நின்று காட்சி அளிப்பதைப்போல் அல்லாமல் குதிரை வாகனம் ஓடுகிற காட்சி அளிப்பதைச் சிறப்பாகக் கூறலாம்.

இனி அண்மையிலே ஒரு ஆங்கிலச் சரித்திரத்தாளிலே (Times Illustrated) பொய்க்காற் குதிரைப் படங்களைத் தீட்டி அதன் கீழ் அதைப் பற்றிய ஒரு கட்டுரை எழுதப் பட்டு வெளி வந்தது. பொய்க்கால் குதிரை ஆட்டம் பண்டைய இராக்கதத் திருமணத்தின் நடிப்பு என்று அது கூறுகிறது. ஒரு வீரன் குதிரை மேல் ஏறிக்கொண்டு ஒரு அரசியை அழைக்கிறான். அவள் வருவதற்கு முதலில் மறுக்கிறாள். பிறகு அவளும் தன் குதிரைமேல் ஏறி வருகிறாள். இருவருக்கும் வாள் போர் நடக்கிறது. அவள் வெல்லுகிறாள். ஆனாலும் உடன்படுகிறாள். அவன் அவளைக் கவர்ந்து கொண்டுபோய்த் திருமணம் செய்து கொள்ளுகிறான். அதுவே இந்த நடிப்பின் உட் கதை என்று அக்கட்டுரை கூறுகிறது. எட்டுத் திருமணங்களில் இராக்கத மணமும் ஒன்று. அதன்படி ஒரு பெண்ணைப் பலவந்தமாகக் கவர்ந்து சென்று மணமுடித்தல் அம் மணம் ஆகும். இந்த முறை தமிழ்நாட்டு முறையல்ல. காட்டு மிராண்டிகள் முறையாகும். இதனை அந்தக் கட்டுரையில் புகுத்தி அதுவே இவ் வாட்டத்தின் உட்கருத்து என்று அக் கட்டுரை கூறுகிறது. இந்தக் கொள்கையை எந்த ஆதாரத்திலிருந்து அக்கட்டுரையாளர் எழுதினரோ அறியோம். இவர் கூறுவதெல்லாம் வடநாட்டுப் புராணக் கதைகளே ஆகும். தென்னாட்டுக் கூத்துக்கு வடநாட்டு ஆதாரம் ஏனோ வேண்டும்? இந்த ஆடல் பொது மக்களைக் களிப்பிக்கச்செய்யும் ஒரு ஆட்டமே ஒழியப் பண்டை மண வழக்கத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஆடல் என்று கருத வகையில்லை. மேற்கு நாட்டார்களும், அவர்களைப் பின்பற்றி ஏங்கி நிற்கும் நமது நாட்டுச் சில எழுத்தாளர்களும், இல்லாத கற்பனைகளையும் காரணங்களையும் கற்பித்து அது உண்மையென்று நம்பும் வண்ணம் கட்டுரைகளைத் தீட்டி விடுவது தற்கால வழக்கம் ஆகிவிட்டது. இது கண்டிக்கத் தக்க ஒரு செயல் ஆகும்.

(தொடரும்)

மதிப்புரை

விநாயகர் வழிபாட்டு நூல் :—காஞ்சிபுரம் மெய்கண்டார் கழக ஆசிரியர், சித்தாந்தக் கலைமணி, வித்துவான் திரு. சி. அருணை வடிவேலு முதலியார் அவர்களைச் சைவத் தமிழுலகம் நன்கறியும். அவர்கள் சிவஞான சுவாமிகளின் காஞ்சிப் புராணத்தினைத் தெளிவமைந்த சிறந்த குறிப்புரையுடன் பதிப்பித்துப் பல ஆண்டுகட்கு முன்னரே அறிஞருலகின் பாராட்டுதலைப் பெற்றவர்கள். அவர்கள் இயற்றியுள்ள இந்நூலானது—இறைநிலை, இறைவன் மேற்கொள்ளும் திருவுருவின் இயல்பு, விநாயகத் திருவுருவின் சிறப்பியல்பு, விநாயகரை வழிபட்டுத் திருவருள் பெற்ற பெருமக்கள் வரலாறு, மந்திரங்களின் இயல்பு, திருமுறைகளிற் போந்துள்ள தமிழ் மந்திரங்களின் தொகுப்பு, விநாயகரை வழிபடும் முறை என்பன பலவற்றை நன்கினிது விளக்கி, விநாயகப் பெருமானின் புகழ் மாலைகளின் தொகுப்பும் குறிப்புரையும் கொண்டு இலங்குகின்றது. சமய உணர்வும் இறைவழிபாட்டில் உறைப்பும் திருமுறைகளில் ஈடுபாடும் தமிழ்மொழிப் பற்றும் உடைய தக்கவர்கள் அனைவரும், போற்றிப் புகழ்ந்து மகிழ்ந்து கடைப்பிடித் தொழுகத் தகுந்த சிறப் புடையது இந்நூல். தமிழுக்கு ஆக்கம் அளிக்க வல்ல இப் புதுவகைச் சிறப்புநூலை, விநாயகர் பெயரால் முதன் முதலாக வனப்புற வெளியிட்டுத் தமது தொண்டினைத் தொடங்கியுள்ள கச்சி ஏகம்பர் நூற்பதிப்புக் கழகத்தாரின் செயற்றிறன் பெரிதும் பாராட்டுதற் குரியதாகும். (நூல் கிடைக்குமிடம் : 459, காந்தி ரோடு, காஞ்சிபுரம். விலை : அட்டைக் கட்டு, 1-25 ; துணிக்கட்டு 1-75.)

மன்னு விநாயகர் மாண்வழி பாட்டுநூல்
துன்னு தமிழ்ச்சைவர் துய்த்துவப்ப,—நன்னர்
அருணை வடிவேலர் ஆக்கி அளித்தார்
பொருணலங்கள் சாலப் பொதிந்து. —முருகவேள்.

அறிக்கை

சைவ சித்தாந்த மகா சமாஜ நிர்வாக சபைக் கூட்டம் 13—7—1958 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு. இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையில் கூடும். அங்கத்தினர்கள் அனைவரும் வரும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

—காரியதரிசி

திருமணம்

நமது சமாஜப் பொருளாளராகவும், செயலாளராகவும் இருந்து தொண்டாற்றிய திருவாளர் ம. சி. நித்தியானந்தம் அவர்களுக்கும், சௌ. அமிர்தவல்லி அம்மையாருக்கும் 26-6-58 அன்று மயிலையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மணமகனரின் தந்தையார் திரு. ம. சி. சம்பந்த முதலியார் சிவநெறிப் பற்றும் சீலமும் மிக்குடைய பெருந்தகையார். அவர்கள் இவ்வாண்டு மயிலையில் நிகழ்ந்த நம் சமாஜ 52-ஆம் ஆண்டு விழாவிற்காக ரூ. 280 நன்கொடை வழங்கிய நல்லாராவர். சமாஜப் பொன் விழா மலர்க்கும் அவர்கள் பெரிதும் உதவி செய்துள்ளார்கள். இத்தகு சீரிய குடும்பத்தினைச் சார்ந்தவர் அனைவரும், மணமக்களும் கற்பகாம்பிகை சமேத கபாலீச்சுரப்பெருமான் திருவருளால் எல்லா நலங்களும் பெற்று நீடினிது வாழ்ந்தின்புறுக எனச் சமாஜம் வாழ்த்துரைத்து மகிழ்கின்றது.

மயிலைச் செல்வர் சம்பந்தர்
மைந்தர்! சமாஜத் தின்முன்னைச்
செயலர், பொருளர் எனத்திகழ்ந்தோர்!
சிறந்த அன்பர்! அமைதிமிக்க
இயல்பர்! நித்தி யானந்தம்
இனிய அமிர்த வல்லியுடன்,
பயிலும் நலங்கள் பலபெருகப்
பல்லாண் டின்பாய் வாழ்கநன்றே!

—முருகவேள்